**DEPOSITIONS OF WITNESS**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE TIRUPPUR**

**CASE No** :SC 76/2021
Prosecution Witness 1
Defence
Court ASJ

Deposition of witness for PW 1
Name : ArunRaj
Father Name : Ulaganathan
Village
Taluk
Caste
Calling
Religion
Age

Solemnly afirmed in accordance with the provisions of act X of 1873 of the day of 14.02.2023.

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரனை**

1. நான் திருப்பூர மாவட்டம் எ.கே.ஜி நகரில குடியிருந்து வருகிறேன். மல்லிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். 29.11.2020 ம் தேதியன்று காலையில் எனது TVS Excel வண்டியில் கடைக்கு தேவையான பொருட்களை வாங்க பாளையங்காடு பஸ்டாப் அருகே வந்த போது வீட்டிலிருந்து அம்மா போன் செய்தார். போனில் பேசிக்கொண்டு இருந்த போது வெள்ளை வண்டியில் 2 பேர் வந்தார்கள். எனது வண்டி அருகே வந்தவர்கள் எனது போனை பிடிங்கிக்கொண்டு சென்று விட்டார்கள். வண்டியில் பொருட்கள் என்னால் அவர்களை துரத்தி செல்லமுடியவில்லை. மேலும் போனை பிடிங்கியதால் நான் கீழே விழுந்து விட்டேன். வண்டியில் வந்து என் போனை பிடிங்கியதால் சரியாக பார்க்கவில்லை. இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் அரசு தரப்பில் அ.த.சா 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**சாட்சி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கடந்த 29.11.2020 ம் தேதி காலை 7 மணிக்கு பாளையகாடு பஸ்டாப் அருகே வண்டியை நிறுத்தியபோது பின்னர் வந்த வெள்ளை கலர் நம்பர் பிலேட் இல்லாத Scooter ல் வந்த மூன்று பேர் வழி மரித்தும் அதில் ஒருவர் கத்தியை காட்டி சத்தம் போடாமல் செல்போன் பணத்தை எடுடா என மிரட்டியும் மற்றொருவர் பின்னர் கத்தியை வைத்து சத்தம் போட்டால் குத்தி விடுவேன் என்றும் இன்னொருவர் வண்டியில் உட்கார்ந்து இருந்தார் என்றும் அதனால் அவர்கள் என் பாக்கட்டில் இருந்த Redmi செல்போனை பரித்துகொண்டு சத்தம் போட்டால் கொன்று விடுலேன் என்று மிரட்டியும் நான் பயத்தில் திருடன் என சத்தம் போட அங்கு இருந்த பொதுமக்கள் ஓடி வர மூன்று பேரில் இருவர் பொது மக்களை பார்த்து கத்தியை காட்டி நான் ராக்கியபாளையம் நௌபல் எனவும் மறறொருவர் ராயபுரம் Satham Hossain என்றும் மிரட்டி கத்தியை காட்டியவாரு அவர்கள் வந்த வண்டியில் ஜீவனந்தம் வண்டியை எடுக்க சொல்லி மூன்று பேரும் தப்பிச்சென்று விட்டார்கள் என்றும் இதில் காயம் எனக்கு எதுவும் ஏற்படவில்லை என்றம் பிறகு எனது உறவினர் மூலமாக காவல் நிலையம் வந்து என்னை கத்தியை காட்டி மிரட்டி செல்போனை பிடிங்கிய மூன்று நபர்கள் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தார். போலீசார் கைது செய்து இருந்த மூன்று பேரையும் அடையாளம் காட்டி கைப்பற்றி வைத்து இருந்த செல்போனை என்னுடைய து என்று அடையாளம் காட்டியும் அவர்கள் பயன்படுத்திய வெள்ளை நிற டயோ வண்டியையும் அடையாளம் காட்டிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்ய சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் காவல் நிலையத்தில் செல்போனை கானவில்லை என்று தான் புகார் கொடுத்தேன் என்றல் திருடி விட்டு போய்விட்டார்கள் என்று புகார் கொடுத்தேன்.

**மேற்படி குறுக்கு விசாரணை 1–2 எதிரிகள் தரப்பில் ஏற்றுகொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/– M.மேகலாமைதிலி
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.